முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 256/2019

அரசுதரப்பு 4-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜதுரை | வயது | : | 34 |
| தந்தை/கணவர் பெயர் | : | ராதாகிருஷ்ணன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 07.07.2022 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது பண்ருட்டி அடுத்த பாவைகுளத்தில் குடியிருக்கிறேன். ஹாலோபிளாக் கடை வைத்துள்ளேன். சுமார் 3 வருடத்திற்கு முன்பு பேருந்தின் கண்ணாடி உடைந்ததாக கேள்வி பட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி பிறழ்சாட்சியாக கருத அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை - போலிசார் விசாரணையில் கடந்த 11.12.2018 ஆம் தேதி நானும், வேலு என்பவரும் அவருடைய கம்பெனியில் பேசி கொண்டிருந்தபோது TN 32 N 3393 என்ற பேருந்தை அணைக்கரையிலிருந்து பண்ருட்டி வந்து கொண்டிருந்ததாகவும், அதே ரோட்டில் பேருந்துக்கு எதிரே வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த இருசக்கரவாகனம் TN 45 AH 9217 கருப்பு கலர் பல்சர் வண்டி பெயர் விலாசம்

தெரியாத 3 நபர்கள் கைகளில் கருங்கல்லும், கோலிகுண்டுகளாலும் பேருந்தின் முன்பக்க கண்ணாடியை உடைத்து சேதப்படுத்தி தெற்கு பக்கம் நெய்வேலி மார்க்கமாக தப்பி சென்று விட்டார்கள் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை